# கழுதைப்புலி

## ஒரு கானகத் தோட்டி



**கோவை சதாசிவம்**



# ஊர் கடந்து கேட்கும் – அந்த உயிர் கரையும் சப்தம்....

மறக்க முடியாத ஒரு நாளைச் சொல்லுங்கள் என்று யாராவது என்னைக் கேட்டால் நான் 2017 நவம்பர் நான்காம் தேதியைச் சொல்வேன்! ஆம்! அந்த நாள் எனது வாழ்வில் மறக்க முடியாத நாள்.

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட பவானிசாகர் அணையின் பின்புறமுள்ள வனப்பகுதி சுஜ்ஜல்குட்டை கிராமத்தில் வழிதவறி நுழைந்த ஒரு

கழுதைப்புலியை ஆடு, கோழிகளை பிடிக்க வந்ததாகக் கருதிய கிராமத்து மக்கள் அதனை கடுமையாகத் தாக்கி “செத்தது கழுதை” என்று புதரில் வீசிவிட்டுப் போயிருக்கிறார்கள். வனத்துக்குள் சுற்றுப்பணி வந்த வேட்டைத் தடுப்புக் காவலர்கள் முனகல் சத்தம் கேட்டு புதரில் பார்க்கையில் ஆறு நாட்களாக உயிருக்குப் போராடும் வரிக்கழுதைப் புலியைப் பற்றிய தகவலை வன அலுவலருக்குத் தந்தார்கள். தகவல் வந்ததும் தாமதிக்காமல் நிகழ்விடம் வந்தேன்!

ஆயிரம் அடிகளுக்கும் முன்பே அந்தக் குரல் எனக்கு கேட்டது. அதுவொரு ஈனக்குரல். பேசுவதற்கு திராணியற்ற உயிர்கள் என்னைக் காப்பாற்றுங்கள் என்று இரஞ்சும் குரல். தொன்னூறு விழுக்காடு மரணத்தை நெருங்கிவிட்ட உயிரின் கடைசிக்குரல். உயிர் கரையும் அந்தக்குரல் இப்போதும் கனவில் வந்து உறக்கம் கலைக்கிறது.

முனகி, அனத்தி, அபயக்குரல் ஒலித்து, ஒலித்து ஆறு நாட்களில் அதன் உடலில் இருந்த நீர் முழுதுமாக வற்றிப்போயிருந்தது உயிரைப்போலவே. இரத்தம் கலந்த உமிழ்நீர் இன்னும் அதன் வாயோரத்தில் வழிந்து கொண்டிருக்கிறது. ஒருபக்கத் தலை மண்ணில் புதைந்தும் அடித்து ரணமான வலது காதில் இருந்து நூற்றுக்கணக்கான புழுக்கள் நெளிந்து கண்களின் புருவம் வரை பரவி கழுதைப் புலியை உயிருடன் தின்றபடி இருந்தன.

இன்றோ, நாளையோ இது இறந்துவிடும். இங்கேயே விட்டுவிடுங்கள். பன்றிகளும், பாறுக் கழுகுகளும் தின்று தீர்க்கப்படும். என்ன செய்தும் இதனை காப்பாற்ற முடியாது! வலியால் துடிப்பதை பார்க்க சகிக்கவில்லை டாக்டர் இதனை கருணைக் கொலை செய்து விடுங்கள் என்று உடனிருப்பவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

கொலை செய்வது எளிது, காப்பாற்றுவது கடினம். எனக்கு மனம் ஒப்பவில்லை! அருகி வரும் ஓர் உயிரினம் இதனைக் கூட காப்பாற்ற முடியாவிட்டால்.... இந்த காட்டில் வாழ்ந்த சிவிங்கிப் புலிகளைப் போல இவைகளும் அழிந்து போகும். கருணைக் கொலைக்கு உடன்பட்டு விட்டால், அது மருத்துவ அறமாகயிருக்காதே! குற்றுயிரும் கொலையுயிருமாகக் கிடந்த கழுதைப் புலியை கோணிப்பைக்குள் திணித்து வனக் கால்நடை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று முதலுதவி செய்தேன்!

பல நாட்கள் உணவு எடுத்துக் கொள்ளாமல் இருந்ததால் அதன் காலில் உள்ள இரத்தக் குழாய்கள் மிகவும் சுருங்கியிருந்தது. கழுத்தில் உள்ள இரத்தக் குழாய் வழியாக மருந்துகளைச் செலுத்தினேன்! அப்போது தான் கவனித்தேன். மீட்கப்பட்ட கழுதைப்புலியின் கண்ணில் ஏற்கனவே புரை ஏற்பட்டிருந்தால் கண் பார்வை தெளிவில்லாமல் காட்டை ஒட்டிய கிராமத்தில் நுழைந்திருக்கிறது! கண்பார்வை தெளிவற்று தடுமாறும் கழுதைப்புலியை மக்கள் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள். கனமான பொருட்களைக் கொண்டு அடித்திருப்பதால் அதன் கால், தலைப் பகுதிகளில் பெரிய காயங்கள் இருந்தன.

இரத்தத்தை பரிசோதனை செய்ததில் சர்க்கரையின் அளவு 450க்கும் அதிகமாகயிருந்தது. இந்த நிலையில் கிருமித் தொற்றுக்கு சிகிச்சை அளிப்பது மிகவும் கடினமானது. சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்கும் முறையான சிகிச்சையைச் செய்து கால், முதுகு, தலையில் முறிந்து போன எலும்புகளை அறுவை சிகிச்சை செய்து கழுதைப்புலியை சிறிது, சிறிதாக குணப்படுத்துவதில் கவனமாகயிருந்தேன்! நஞ்சுள்ள கண்ணாடி விரியன், நாகப்பாம்புகளுக்கு இருந்த கேன்சர் கட்டிகளை அறுவை சிகிச்சையில் அகற்றி அவைகளைக் காப்பாற்றிய

இந்தக் கைகள் கழுதைப்புலியை சாகவிடாது என்கிற நம்பிக்கையில் மருத்துவத்தை தொடர்ந்தேன்!

ஒரு மாத கால தொடர்ச் சிகிச்சையில் 72 பாட்டில் குளுக்கோஸ் மற்றும் சத்தூசி மருந்துகள் ஏற்றப்பட்டு உடல் தேறி வந்தது. கழுதைப்புலிக்கு கோழி, முட்டை, மாட்டிறைச்சி என்று உணவுகளை வாங்கி வந்து ஊட்டி விட வேண்டும்! தானே உண்ணும் தகுதி கொண்ட அதன் தாடை நொறுக்கப்பட்டிருந்தது. பெற்ற குழந்தைகளுக்கு சோறூட்டும் ஒரு தாயின் மனநிலையில் இருந்தால் மட்டும் உணவு கொடுக்க முடியும்! அருவருப்பையும், அசிங்கத்தையும் மனதில் நினைத்து முகஞ்சுளிப்போர்கள் அதன் அருகில் செல்ல முடியாது! அதற்கு புரிகிறதோ இல்லையோ சாப்பிடு, சாப்பிடு என்று கழுதைப்புலிக்கு உணவூட்டிய அந்தக் கைகளை நீங்கள் எவ்வளவு குலுக்கினாலும் அதன் கருணைக்கு ஈடாகாது. அடித்துக் கொல்லும் கைகளும், அணைத்துக் கொள்ளும் கைகளும் மனிதக் கைகள் தான் என்பது இதுவரையிலும் கழுதைப்புலிக்கு தெரியாது!

கழுதைப்புலிக்கு நினைவு வரும் போதெல்லாம் மனிதர்களின் குரல் கேட்டால் அதிர்ந்து போகும், அஞ்சி நடுங்கும். மனிதக்குரல் கருணையற்று கொல்லும் குரல். இரக்கமற்று அடித்து நொறுக்கும் குரல், கேட்பாரற்ற உயிர்களை வதைக்கும் குரல் என்று கழுதைப்புலி கருதியிருக்கலாம்!

18 கிலோவாகயிருந்த கழுதைப்புலியை 42, கிலோவிற்கு உடல்தேற்றி உயிர் கொடுத்தோம்! திருப்பூர் இயற்கை கழகத் தோழர்கள் கொடுத்த ஒத்துழைப்பாலும், பேருதவியாலும் கழுதைப்புலியை காப்பாற்ற முடிந்தது. அதுவும் ஒருமுறை திருப்பூரில் நன்கு அறியப்பட்ட ஓர் ஆய்வகத்தில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் செய்வதற்காக போனபொழுது அன்று நாள் முழுதும்



அந்த ஆய்வகத்திற்கு விடுமுறை விடப்பட்டு கழுதைப்புலியின் உடல் முழுதும் ஸ்கேன் செய்து பரிசோதிக்கப்பட்டது. மனிதக் கண்களை பரிசோதித்து சிகிச்சை அளிக்கும் கண் மருத்துவமனை முதன்முதலில் ஒரு கழுதைப்புலியின் கண்களை பரிசோதித்தது. இந்த மருத்துவமனையும் திருப்பூரில் தான் உள்ளது. இங்குள்ள இயற்கை கழகத் தோழர்கள் வெறுமனே விலங்குகளை ரசித்து, ஒளிப்படம் எடுத்து தற்பெருமை பேசித் திரிபவர்கள் இல்லை!

காட்டுயிர்கள் எங்கு அடிபட்டு உயிருக்குப் போராடினாலும், வேட்டையாடப்பட்டாலும், விற்பனை செய்யப்பட்டாலும் களத்திற்குப் போய் அவைகளை மீட்கும் அறவுணர்வு கொண்டவர்கள். எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சையின்போது வலியில் துடிக்கும் கழுதைப் புலியை ஒரு குழந்தையை தேற்றுவது போல் சிகிச்சை அளிப்பதை என்னுடன் இருந்து பார்த்தவர்கள். கண் பார்வையும் காது கேளாமையும் குணமானதும் இதனை காட்டுக்குள் திரும்ப விட வேண்டும் என்பதில் உறுதியாகயிருப்பவர்கள்! இவர்களின் நல்லெண்ணம் நடந்தேற நானும் வேண்டுகிறேன்!

இந்தியாவிலேயே முதன்முறையாக உயிரிழக்கும் நிலையில் இருந்த கழுதைப் புலி ஒன்றை பலகட்ட சிகிச்சைக்குப் பிறகு காப்பாற்றியது இதுவே முதல் நிகழ்வு. தொடர்ச்சியான மருத்துவ கண்காணிப்பும், காட்டுயிர்களின் மீதான கரிசனமும் இதனை சாத்தியமாக்கியது!

எல்லா காட்டு விலங்குகளையும் இப்படி காப்பாற்ற முடியுமா? இத்தனை காலமும் கால்நடை மருத்துவரின் கருணையில் தான் அவைகள் வாழ்ந்தனவா? இச்செயல் இயற்கைக்கு புறம்பாகத் தோன்றவில்லையா? இயற்கையுடன் வாழும் விலங்குகளுக்கு மனிதர்களைப் போல் மருத்துவமனைகள் தேவையா? இது தவறான முன்னுதாரணமாகப்பட வில்லையா? கேள்விகள், எள்ளல்கள், ஏளனங்கள் எல்லா திசைகளில் இருந்தும் ஒலித்தன. மனிதாபிமானத்தைக் கடந்து உயிர்ம நேயத்தை நெருங்கும் எவரும் இப்படியான கேள்விகளை எதிர்கொள்வது புதிதன்று.

இரண்டரை ஆண்டுகள் கடந்து விட்டன. இப்போது கழுதைப்புலி மனிதர்களின் குரலைக் கேட்டால் அதிர்வதில்லை! பயம் கொண்டு அலறுவதில்லை! மனிதர்களுக்குள் கசியும் அன்பின் குரலை அவை உணர்ந்துவிட்டது. கழுதைப்புலியின் தாயகமான காட்டிற்கு எப்போது போகும் என்று இப்போது சொல்ல முடியவில்லை என்றாலும் ஒரு நாள் போகும். காட்டின் துப்புரவாளரான வரிக்கழுதைப் புலியை இறப்பின் எல்லை வரை சென்று மீட்டு வந்த செய்தி பலரும் அறிய வேண்டும் என்று விரும்பிய சூழலியல் எழுத்தாளர் கோவை சதாசிவம் இதனை அனுபவ உரையாக சேர்த்துள்ளார்.

இவரின் எழுத்தை, உரை வீச்சை, கள செயற்பாடுகளை சமூக வலைத்தளங்களில் கண்டு வியந்துள்ளேன்! பலரின் கவனத்திற்கு வந்து சேராத செய்திகளைத் தேடிக் கண்டு

படைப்பாக்கும் முனைப்போடு எப்போதும் இயங்கும் கோவை சதாசிவத்தின் "கழுதைப்புலி - ஒரு கானகத் தோட்டி" நூலின் ஒரு சில பக்கங்களில் நானும் இடம் பெற்றுள்ளதில் மகிழ்ச்சி. தமிழில் இதுவொரு மைல்கல்.

முதன் முதலில் மேற்கு மலைத் தொடரில் அருகி வரும் கழுதைப்புலிகளை காப்பாற்றும் அவசியத்தை வளரும் தலைமுறைக்கு உணர்த்தும் இப்படியான நூல்கள் தமிழில் பெருக வேண்டும்! சூழலியல் களத்தில் முன்னத்தி ஏராக விளங்கும் கோவை சதாசிவம் போற்றத்தக்கவர். அவரைப் பாராட்டி பெருமை சேர்ப்போம்!

*06.12.2020*
கோயம்புத்தூர்

என்றும் அன்புடன்....
**கே.அசோகன்**